# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 58 — 1973 මැයි 04 වැනි සිකුරාදා — 1973.05.04**

58 ஆம் இலக்கம் — 1973 ம் ஆண்டு மே மாதம் 04 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (II அ)—விளம்பரங்கள்

[ஒவ்வொரு மொழியின ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவைசெய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள்—வெற்றிடம் .. | 419 | பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் . | — |


**கவனிக்க.**—முத்திரை (திருத்தம்) சட்டமூலம் 1973 ஆம் ஆண்டு எப்பிறல் மாதம் 19 ந் திகதிய இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

## பதவிகள் — வெற்றிடம்

### "இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவைப் பதவிக்குரிய நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனைகள்"

1. **படிகள்.**—வேறுவிதமாகச் சொல்லப்பட்டாலொழிய, வாடகைப்படி, தற்காலிகமான வாழ்க்கைச் செலவுப்படி, தற்காலிகமான விசேட வாழ்க்கைச் செலவுப்படி என்பன அரசாங்க ஒழுங்கு விதிகளின் பிரகாரம் கொடுக்கப்படும்.

2. **சேவைக்குரிய நிபந்தனைகள்.**—அரசாங்க சேவைக் கொமிஷனின் பிரமாணங்கள், நிதி ஒழுங்குவிதிகள், கருமமுறைக் கைந்நூலின் ஒழுங்கு விதிகள், அரசாங்க பகுதிக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் என்னும் இவற்றுடன் அரசாங்கம் காலந்தோறும் பிறப்பிக்கும் வேறேதும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே நியமனங்கள் இருக்கும்.

3. **நியமன விதிகள்.**—(i) இளைப்பாற்றுச் சம்பளத்துக்குட்படாத பதவிகளுக்கான நியமனங்கள் விடயத்தில் (நாள் வீதச் சம்பளத்தில் இல்லாதவர்களையொழிந்த ஏனையோர் விடயத்தில்) அப்பதவிகளுக்கு நியமிக்கப்படுபவர்கள் தமது சம்பளத்தில் 5 சத விகிதத்தை அரசாங்க சேவை சகாய நிதிக்குச் செலுத்த வேண்டும். அவர்கள் விரும்பினால் மேலும் 5 சத வீதத்தைச் செலுத்தலாம். அவர்கள் 5 சத வீதத்தையோ அத்தோடு மேலும் 5 சத வீதத்தையோ செலுத்தினாலும், அவர்களுடைய சம்பளத்தில் 7½ சத வீதத்தை ஒவ்வொரு நிதியாண்டு முடிவிலும் குறித்த நிதிக்கு அரசாங்கம் அவர்களுடைய கணக்கிற் செலுத்தும்.

(ii) நியமிக்கப்படுபவர்கள் பிணை செலுத்த வேண்டுமென்று அவர்களுக்குரிய பகுதித் தலைவர்கள் விதித்தால் அரசாங்க உத்தியோகத்தர்கள் (பிணை) கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் அவர்கள் அப்படிச் செய்ய வேண்டும்.

(iii) ஏற்கனவே அரசாங்க சேவையில் இல்லாத அச்சேவைக்குப் புதிதாக நியமிக்கப்படுபவர்கள் இத்துவீபத்தின் எப்பகுதியிலேனும் சேவையாற்றக்கூடிய உடலுறுதியுள்ளவர்களென்று ஓர் அரசாங்க வைத்திய உத்தியோகத்தரின் வைத்தியப் பரீட்சைக்கு ஆளாகி அதிற் சித்தி எய்த வேண்டும்.

4. **அரசாங்க சேவையில் புதிதாகச் சேர்ந்தோர்.**—(i) சந்தர்ப்பத்திற்கேற்ப, உபகாரச் சம்பளத்துக்குரிமையுள்ள பதவிகளுக்கு/உபகாரச் சம்பளத்துக்குரிமையற்ற பதவிகளுக்கு, நியமிக்கப்படும் புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர்களின் தகுதிகாண்/சோதனைக் காலம் எப்பதவி சம்பந்தமாகவும் நீடித்த காலம் விதிக்கப்பட்டாலொழிய மூன்றுண்டாகும்.

(ii) புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர் யாவரும் 1956 இன் 33 ஆம் இலக்க அரசகரும மொழிச் சட்ட ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக்கொள்கையைச் செயற்படுத்தும் பொருட்டு இப்பொழுதுள்ள அல்லது இனிமேல் புகுத்தப்படும் எவையேனும் சட்டங்களுக்கும் விதிகளுக்கும் இணங்கி ஒழுகுவார் என்னும் நிபந்தனைக்குட்படல் வேண்டும்.

(iii) (அ) தமது கடமைகளைத் திறம்பட ஆற்றுவதற்கு அத்தியாவசியமற்ற புறநடையான சந்தர்ப்பங்களில் ஒழிய அவர்கள் தகுதிகாண்/சோதனைக் காலத்தில் அரசகரும மொழியில்—சிங்களத்தில்—செயலாற்றும் அறிவு பெறல் வேண்டும்.

(ஆ) தகுதிகாண்/சோதனைக்கால முடிவில் பிறவற்றுடன் க. ப. த. ப. கட்டத்துக்கு மேற்படாத நிலைவரையுள்ள விதிக்கப்பட்ட சிங்களத் தேர்ச்சிச் சோதனையில் விதிக்கப்பட்ட காலத்துள் தேறுவதைப் பொறுத்தே அவர்கள் உறுதிப்படுத்தப்படுவர். விதித்துள்ள காலத்துள் இத்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடையத் தவறினால், சோதனையில் தேறும்வரை அவர்களுக்குரிய ஆண்டேற்றங்கள் செலுத்தப்படமாட்டாது. சிங்களத்தில் தேர்ச்சியடைய வேண்டிய தரத்தை எய்தாத உத்தியோகத்தர்களின் சேவைகள், அவர்களின் தகுதிகாண்/சோதனைக்கால முடிவில் நிறுத்தப்படலாம்.

---

### முக்கிய அறிவித்தல்

(இலங்கை) குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் வாராந்த அறிவித்தலின் பகுதி I தொகுதி (IIஅ) விலும் (IIஆ) விலும் பிரசுரிக்கப்படும் எல்லா அறிவித்தல்களும் அவ்வறிவித்தல்கள் பிரசுரமாகும் வாரத்திற்கு முந்திய புதன்கிழமை நண்பகல் 12.00 வரையும் ஏற்றுக்கொள்ளப்படும். குறிக்கப்பட்ட திகதிக்கும் நேரத்திற்கும் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் யாவும் எதுவித காரணத்தை முன்னிட்டும் பிரசுரத்திற்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

எல். டபிள்யூ. பி. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்.
கொழும்பு,
1972 ம் ஆண்டு திசெம்பர் மீ 15 ந் உ.

குறிப்பு.—சிங்கள மொழிமூலம் அரசாங்க சேவையில் சேருவதற்குத் தகைமை பெறுவோர் உறுதிப்படுத்தற்கு ஒரு முன்தேவையாக இத்தேர்ச்சி சோதனையில் சித்தியடைவதிலிருந்து விலக்குப்பெறுவர்.

5. வேண்டிய தகைமைகள்.—விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபிக்கவேண்டும். "இலங்கையர்" என்பவர் வம்சாவழியாகவோ பதிவு வழியாகவோ இலங்கைப் பிரஜையாகவிருப்பவராகும்.

6. யுத்தசேவைச் சலுகை.—ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் மகாராணியின் போர்ப்படைகளில் முன்பு சேவையாற்றியவர்களும், தியணைக்கும் படை, விமானத் தாக்கப் பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்புப் படை என்பனவற்றிலும் (தாமாகவே இப்படைகளை விட்டு விலகியவர்களை ஒழித்த) முழுநேர கடமையாற்றியவர்களுக்கும் 1939 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 3 ஆம் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி வரைக்கும் உள்ள அச்சேவைக் காலத்தை தகைமைக் கருமத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். அப்படிச் செய்வதற்கு அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15 ஆம் திகதிக்கு முன் சேர்ந்து இருத்தல் வேண்டும். அத்தோடு அவர்கள் ஆற்றிய சேவை திருப்திகரமானதாயும் தொடர்ச்சியானதாயுமிருத்தல் வேண்டும்.

7. பிற தேவைகள்.—(i) தகைமையுடைய அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் அவ்வவர்களின் திணைக்களத் தலைவர்கள் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் விளம்பரப்படுத்தப்படும் ஒரு பதவிக்கு விண்ணப்பிக்கும் ஒவ்வொரு அத்தகைய உத்தியோகத்தரும் தான் விண்ணப்பம் அனுப்பிய தேதியை இதற்கெனத் தரப்பட்டுள்ள அச்சிட்ட அஞ்சல் அட்டையில் ("ஆ" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது) அரசாங்க சேவை ஆணைக்குழுச் செயலாளருக்கு நேராக விண்ணப்பம் முடிவடையுந் தேதியன்றோ அதற்கு முன்னரோ அறிவித்தல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்களின் விடயத்தில் திணைக்களத் தலைவர்கள் விண்ணப்பங்களை அனுப்பும்போது, நடைமுறைக் கைந்நூலின் 109 நிருவாக பிரமாணத்திற்கிணங்க விண்ணப்பிப்பவர்கள் (தேர்ந்தெடுக்கப்பட்டால்) விடுவிக்கத் தாம் தயாராயுள்ளனரோ அன்றோவெனவுங் கூறல் வேண்டும்.

(ii) குறித்த நேரத்தில் குறித்த இடத்தில் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகமாயிருக்க வேண்டும் என்று பரீட்சார்த்திகள் விதிக்கப்படலாம். இது விடயமாகப் பிரயாணச் செலவோ வேறெவ்வகையான செலவோ கொடுக்கப்படமாட்டாது.

(iii) ஒரு பரீட்சார்த்தியைச் சிபார்சு செய்ய விரும்பும் எவரும் அப்பரீட்சார்த்திக்கு குணநலவத்தாட்சிப் பத்திரம் ஒன்றைக் கொடுத்து சிபார்சு செய்யலாம். ஆனல் குறித்தவோர் பரீட்சார்த்தி விடயத்தில் தலையிட்டு, அவருக்கு ஆதரவு தேட முயற்சித்தால் அது அப்பரீட்சார்த்திக்குத் தகைமையின்மையை உண்டாக்கிவிடும்.

(iv) ஒரு பரீட்சார்த்தி தமது விண்ணப்பத்தில் பிழையான கூற்றைக் கொடுத்திருப்பின், அது தெரிவிற்கு முன்னர் கண்டுபிடிக்கப்படின், அப்பரீட்சார்த்திக்குத் தகைமையினம் உண்டாக்கிவிடும். தெரிவுக்குப் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் தெரிவு செய்யப்பட்டவர் பதவியிலிருந்து நீக்கப்படுவர்.

(v) இவ்விளம்பர விதிகள் எல்லாவற்றுக்கும் இணங்காத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

8. தகுதிக்கான சம்பளத்தின் வரையறை.—தகுதிக்கான சம்பளம் என்பது நிலையான அடிப்படைச் சம்பளத்தையே குறிக்கும். பதிற் சேவைச் சம்பளம் வேறும் படிகள் முதலியன சம்பளத்துடன் அடங்கியது.

---

## நீதிச்சேவைகள் ஆலோசனைச் சபை

### ஸ்ரீ லங்கா நீதிச்சேவையில் அலுவலர் பதவிகள்

ஸ்ரீ லங்கா நீதிச்சேவையில் அவ்வப்போது ஏற்படும் ஆளின்மையான பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்குப் பரிசீலனைக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவ்வலுவலகத்தினல் வழங்கப்படும் படிவங்களில் விண்ணப்பங்கள் செய்யப்படுதல் வேண்டும்.

ஏற்கனவே 1972 ஜுலை அல்லது நவம்பரில் நீதிச்சேவைகள் ஆலோசனைச் சபையால் நடாத்தப்பட்ட நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றியவர்கள் மீண்டும் விண்ணப்பிக்கத் தேவையில்லை.

குறிப்பு

(i) விண்ணப்பப்படிவங்களை அஞ்சல் மூலம் அனுப்புமாறு விடுக்கப்படும் வேண்டுகோள்களுடன் சுய முகவரியிடப்பட்டதும் முத்திரை ஒட்டப்படாததுமான 9″ × 4″ அளவுக்குக் குறையாததுமான கடிதவுறை ஒன்று அனுப்பப்படல் வேண்டும். அத்துடன் விண்ணப்பஞ் செய்பவர் அரசாங்க சேவையிலுள்ள ஓர் அலுவலரா இல்லையா என்பதையும் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

(ii) விண்ணப்பப்படிம் அல்லது அத்தகைய படிவம் சம்பந்தமான கடிதமொன்று அஞ்சலில் தொலைந்துவிட்டது அல்லது தாமதமாகிவிட்டது என்பனபோன்ற முறைப்பாடுகள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படமாட்டா.

2. நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்

நியமனங்கள், முதற்படியாக, தற்காலிக நியமன அடிப்படையில் இருப்பதுடன் ஆரம்பச் சம்பளத்திட்டத்திலேயே சாதாரணமாகச் செய்யப்படும். நியமனம் நிரந்தரச் சேவைக்கு நியமிப்பதற்கான முன்னுரிமை எதையும் கொண்டிருக்காது, ஆயினும் நியமிக்கப்படும் ஒருவர் குறைந்த பட்சம் ஓராண்டுகாலம் கடமையாற்றிய பின்னரே நிரந்தர சேவைக்கு நியமிக்கப்படுவதற்காகப் பரிசீலிக்கப்படுவதற்குத் தகவுடையவராவர். நிரந்தர நியமனம் சகாயநிதி அடிப்படையில் இருக்கும். தெரிவு செய்யப்படும் அபேட்சகர் தமது சம்பளத்தில் 6% தொகையை அரசாங்க சேவைச் சகாய நிதிக்கு உதவுதொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். அரசாங்க உதவு தொகை 9% ஆகவிருக்கும். நிரந்தர நியமனம் மூன்றுண்டு காலத்தகுதிகாண் நிலையைக் கொண்டிருக்கும். இக்காலத்தில் ஓர் அலுவலர் க. பொ. த. (சாதாரணதரம்) பரீட்சையில் அல்லது அதற்குச் சமானமான வேறெந்தப் பரீட்சையிலும் சிங்களத்தில் திறமைச் சித்தியொன்றுக்குக் குறையாத கல்வித் தகைமையொன்றை ஏற்கனவே கொண்டிருந்தாலன்றி சிங்களத்தில் தேர்ச்சிச் சோதனையொன்றில் சித்தி எய்துமாறு வேண்டப்படுவர்.

3. சம்பளமும் படியும்.—இப்பதவிக்குரிய திரட்டிய சம்பளவிகிதம் வருமாறு :—

ஆண்டொன்றுக்கு ரூபா 13,340 இல் ஆரம்பித்து ரூபா 480 ஐக் கொண்ட 5 ஆண்டுயர்ச்சிகளையும், ரூபா 600 ஐக் கொண்ட 8 ஆண்டுயர்ச்சிகளையும் கொண்டு ஆண்டொன்றுக்கு ரூபா 20,640 வரை அதிகரிக்கும். ஆண்டொன்றுக்கு ரூபா 17,040 இலும் ஆண்டொன்றுக்கு ரூபா 19,400 இலும் திறமைத் தடைகளுண்டு.

பயிற்சிக்காலமொன்று அவசியமெனக்கருதப்படுமானல் அக்காலத்துக்குப் பயிற்சிப்படியாக மாதமொன்றுக்கு ரூபா 600 வழங்கப்படும்.

4. தகைமைகள்

ஒவ்வொரு அபேட்சகரும்—ஸ்ரீலங்காவின் பிரஜைகளில் ஒருவராக இருப்பதோடு—

(அ) ஆறு ஆண்டுகளுக்குக் குறையாத ஒரு காலத்துக்குத் தொழிலில் தீவிரமாக ஈடுபட்டுள்ள ஒரு வழக்குரைஞராகவோ அல்லது வழக்கறிஞராகவோ இருத்தல் வேண்டும், அல்லது

(ஆ) ஊர் நீதிமன்றத் தலைவரொருவர் அவர் அப்பதவி வகிக்கும் காலத்துடன், வழக்குரைஞராகவோ அல்லது வழக்கறிஞராகவோ தொழிலில் தீவிரமாக ஈடுபட்டுள்ள காலத்தையும் சேர்த்து மொத்தம் பத்து ஆண்டுகளுக்குக் குறையாதிருத்தல் வேண்டும்.

5. அபேட்சகர்கள் பின்வரும் சாதனங்கள் எதையும் அல்லது அனைத்தையும் சமர்ப்பிக்குமாறு வேண்டப்படும்போது அவ்வாறு செய்தல் வேண்டும்:—

(அ) பிறப்புப்பதிவுச் சான்றிதழ் ;

(ஆ) பட்டதாரிப்பட்ட அல்லது ஆகக்கூடுதலான கல்வித் தராதரப் பத்திரம் ; அத்துடன்

(இ) சிங்களத்தில் சித்தியெய்திய ஆகக்கூடுதலான பரீட்சைத் தராதரப் பத்திரம்.

6. அரசாங்க சேவையிலுள்ள அலுவலர்களிடமிருந்துவரும் விண்ணப்பங்கள் திணைக்களத்தலைவர்களினூடாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

7. விண்ணப்பங்களும் அவை சம்பந்தமான வேறெந்தக் கடிதத் தொடர்புகளும் நீதிச்சேவைகள் ஆலோசனைச் சபைச் செயலாளருக்கே முகவரியிடப்படவேண்டுமேயன்றி வேறெந்த அலுவலரின் பெயருக்கும் அனுப்பப்படலாகாது.

8. விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்ற விண்ணப்பதாரருக்குத் தெரிவிக்கப்படும். விண்ணப்பம் அனுப்பிய திகதியிலிருந்து 14 நாட்களுக்குள் விண்ணப்பம் கிடைத்தமைபற்றிய அறிவிப்பை விண்ணப்பதாரர் எவரும் பெற்றுக்கொள்ளாத பட்சத்தில் உடனடியாக அதுபற்றி கீழ்க்காணும் முகவரிகாரருக்கு அறிவித்தல் வேண்டும்.

லயனல் சமரதுங்க,
செயலாளர்,
நீதிச்சேவைகள் ஆலோசனைச் சபை.

நீதிச்சேவைகள் ஆலோசனை, ஒழுக்காற்றுச் சபைகள் அலுவலகம்,
த. பெ. 573,
சி/52, கெப்பிட்டிப்போல வீதி,
கொழும்பு 5,
19 ஏப்ரல், 1973.

5-6—04.05.73 ந் திகதிய வர்த்தமானி இல. 58

---

## ஸ்ரீ லங்கா தொண்டர் படை—உத்தியோகத்தர் பதவிகள் வெற்றிடம்

ஸ்ரீ லங்கா தொண்டர் படையில் இரண்டாவது லெப்றினன்ற் ஆக அரசாணை அமர்வுபெற வெற்றிடங்கள் உள்ளன.

2. தொண்டர் படையில் அரசாணை அமர்வுபெற விண்ணப்பிக்கும் அபேட்சகர்கள் பின்வரும் தகைமைகளைப் பூர்த்தி செய்தவர்களாய் இருத்தல் வேண்டும் :—

(அ) ஸ்ரீ லங்காப் பிரசையாய் இருத்தல் வேண்டும்.
(ஆ) 1973 ஜூன் மாதம் 01 ம் திகதியன்று 22 வயதுக்கு மேற்பட்டவராயும் 30 வயதுக்கு உட்பட்டவராயும் இருத்தல் வேண்டும்.
(இ) தரைப்படைத் தளபதியினால் விதிக்கப்பட்ட, அத்தகைய வைத்தியப் பரிசோதனையில் சித்தியெய்துவதற்குத தகுதியுடையவராய் இருத்தல் வேண்டும்.
(ஈ) சிங்களம், தமிழ் அல்லது ஆங்கிலத்தில் க. பொ. த. ப. (உயர்தர) பரீட்சையில் அல்லது உயர்தர பரீட்சையில் சித்தியெய்தி இருத்தல் வேண்டும்.

குறிப்பு.—(i) அரசாங்கத்தின் அரசகரும மொழிக் கொள்கைக்கு, குறிப்பாக 1956 ம் ஆண்டின் 33 ம் இலக்க அரச கரும மொழிச் சட்டத்துக்கு இணங்கி நடக்க உட்படுதல் வேண்டும்.

(ii) நியமித்தவர்கள், முதற் சந்தர்ப்பத்தில் இரண்டு மாதகால பயிற்சிக்கு ஆளாக உட்படுதல் வேண்டும். இக்கால அளவிலான பயிற்சியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்தோருக்கு மட்டுமே அரசாணை அமர்வு வழங்கப்படும்.

3. ஸ்ரீ லங்கா தொண்டர் படையின் ஒழுங்கு விதிகளுக்கு இணங்க, தொண்டர் படையின் ஓர் அலுவலருக்கு, கைச்செலவல்லாத அவரால் செலவிடப்பட்ட செலவுகளைப் பிரதானமாக ஈடு செய்யச் சில படிகள் கொடுக்கப்படும்.

4. பொதுச் சேவை நியதிகள், ஸ்ரீ லங்கா தொண்டர் படையையும், தரைப்படைச் சட்டத்தையும் நெறிப்படுத்தும் (357 ம் அத்தியாயமான) தரைப்படைச் சட்டத்தின் 7 ம் 19 ம் பிரிவுகளின் நியதியின்படி ஒரு தொண்டர் கடமைக்காகத் திரட்டப்படுவதற்கு உட்பட்டவராகிறர். கடமைக்காகத் திரட்டப்படும் முழு நேர காலத்தின் போது தொண்டர் படையின் அங்கத்தவர்கள், நிரந்தரப் படையின் அலுவலர்களுக்குப் பொருத்தமாகும் அதே வேதனத்தையும் படிகளையும் கொடுக்கப் பெறுவர்.

5. இவ்வெற்றிடங்கள், தொண்டர் படைக்கேயன்றி நிரந்தரப் படைக்கல்ல என்பதும், தெரிவு வேதனம் பெறுவதற்குரிய நிரந்தரத் தொழிலை ஏற்படுத்தவில்லை என்பதும் வற்புறுத்தப்படுகிறது.

6. விண்ணப்பங்களானவை உரிய மாவட்டத்தில் உள்ள கிராம சேவையாளர் இடம் இருந்து அல்லது பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் இடம் இருந்து பெறப்பட்ட குணவியல்பு பற்றிய நற்சான்றிதழ் உட்படவுள்ள நற்சான்றிதழ்களின் பிரதிகளுடன், விண்ணப்பகாரருக்கு நன்கு அறிமுகமான பொறுப்பு வாய்ந்தவர்களிடமிருந்து கடந்த ஈராண்டுகளுக்கிடையில் பெறப்பட்ட குணச் சான்றிதழ்கள் இரண்டும் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

7. மேலதிகமான விண்ணப்பங்கள் பெறப்பட்டால், மேற்போந்த நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யும் அபேட்சகர்களிடமிருந்து தொடக்கத் தெரிவு செய்யப்படும். இதன்பின் பாதுகாப்பு அமைச்சினால் நியமிக்கப்பட்ட தெரிவுச் சபையினால் அவ் அபேட்சகர்கள் நேர்முகமாகப் பரீட்சிக்கப்பட்ட பின்னர் இறுதித் தெரிவு செய்யப்படும். நேர்முகப் பரீட்சைகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட அபேட்சகர்கள் அத்தகைய நேர்முகப் பரீட்சைகள் நடக்கும் இடம், திகதி, நேரம் என்பன பற்றி எழுத்துமூலம் அறிவித்தல் கொடுக்கப்பெறுவர். இது சம்பந்தமாக ஏற்படும் பிரயாணச் செலவுகள் அல்லது வேறு செலவுகள் அரசாங்கத்தினால் கொடுக்கப்பட மாட்டா. தெரிவுச் சபையால் நேர்முகப் பரீட்சைகளில் தேர்ந்தெடுக்கப்பெறாத அபேட்சகர்கள் அவ்விதமே அறிவித்தல் கொடுக்கப்பெறுவர்.

8. விண்ணப்பங்கள் கீழே தரப்பட்டுள்ள விதித்த படிவத்துக்கு ஏற்ப விண்ணப்பகாரரின் சொந்தக் கையெழுத்தில் தயாரிக்கப்பட்டு, தரைப்படைத் தலைமை நிலையம், தொண்டர் கிளை, அஞ்சல் அலுவலகப் பெட்டி இலக்கம் 553, கொழும்பு என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். விண்ணப்பத்திலும் அவற்றை அனுப்பும் உறையின் இடதுபக்க மேல் மூலையிலும் "விண்ணப்பம்—ஸ்ரீ. தொ. ப. அரசாணை அமர்வுகள்" என அடையாளம் இடப்படல் வேண்டும். விண்ணப்பங்கள் 1973 ஆண்டு ஜூன் மாதம் 01 ம் திகதி பிற்பகல் 4 மணிக்கு முன்னர் தரைப் படைத் தலைமை நிலையத்தை வந்தடைதல் வேண்டும்.

குறிப்பு :

1. விண்ணப்பத்துடன் சான்றிதழ்களின் பிரதிகள் (மூலப் பிரதிகள் அல்ல) இணைக்கப்படுதல் வேண்டும்.

2. விண்ணப்பப் படிவங்கள் இத்தலைமை நிலயத்தில் வழங்கப்பட மாட்டாது.

எம். ஏ. ஜயவீர,
பிரிகேடியர்,
தரைப்படைத் தளபதிக்காக.

தரைப்படைத் தலைமை நிலையம்,
அ. அ. பெட்டி இல. 553,
கொழும்பு,
1973 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 23 ம் திகதி.

### ஸ்ரீ லங்கா தொண்டர் படையில் அரசாணை அமர்வுக்கு விண்ணப்பம்

1. முழுப் பெயர் (பெரிய, தெளிவான எழுத்துக்களில்) : ————.
2. அஞ்சல் முகவரி :————.
3. ஆக அண்மையில் உள்ள அஞ்சல்/தந்தி அலுவலகம் : ————.
4. ஆக அண்மையில் உள்ள பொலிசு நிலையம் :————.
5. தேர்தல் மாவட்டம் :————.
6. பிறந்த திகதி :————. வயது :————.
(பிறப்புச் சான்றிதழின் பிரதியொன்று இணைக்கப்படுதல் வேண்டும்)
7. நாட்டினம் :————.
8. இராணுவ, கடற்படை, ஆகாயப்படை, தொண்டர்படை ஆகியனவற்றில் முன்பு சேவையாற்றியிருப்பின் திகதிகள், வகித்த பதவி வரிசைகள் ஆகியவற்றை முழு விபரங்களுடன் குறிப்பிடுக :————.
9. சித்தியெய்தியுள்ள பரீட்சைகளை, பாடங்கள், திகதிகள் ஆகியவற்றுடன் குறிப்பிடுக :————.
(கல்விச் சான்றிதழின் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்)
10. உயரம் :————. அடி :————. அங்குலம் :————.
11. நீர் திருமணமானவரா அல்லது திருமணமாகாதவரா ? : ————.
12. பாடசாலையில் அல்லது பல்கலைக்கழகத்தில் உடற்பயிற்சி விளையாட்டுக்களில் நீர் பெற்ற தனிச்சிறப்புகள் : ————.
13. பாடசாலையில் அல்லது பல்கலைக்கழகத்தில் உமது பாராட்டுக்குரிய வேறு ஏதேனும் குறிப்பிடத்தக்க சாதனைகள் : ————.

14. உமது பாடசாலை அல்லது பல்கலைக்கழக நெறிபற்றிய பின் வரும் விபரங்களைத் தருக :—

பாடசாலை அல்லது பல்கலைக்கழகத்தின் பெயர் :————.

சேர்ந்த திகதி :————.

விலகிய திகதி :————.

சித்தியெய்திய பொதுப் பரீட்சைகள் :————.

15. பாடசாலையை அல்லது பல்கலைக் கழகத்தை விட்டு விலகிய காலம் தொட்டு செய்த தொழில் பற்றிய பின்வரும் விவரங்களைத் தருக :—

| தற்போதைய தொழில் தருநரின் பெயரும் முகவரியும் | தொழிலின் தன்மை | காலம் தொடக்கம் | வரை |
|---|---|---|---|
| | | | |

16. குணச் சான்றிதழ்களைக் கொடுத்துதவியவர்களின் பெயர் களும், முகவரிகளும் :

(சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்)

(1) ————.

(2) ————.

(3) ————.

17. விண்ணப்பகாரரால் ஒப்பமிடப்பட வேண்டிய உறுதியுரை:—

என்னால் கொடுக்கப்பட்ட மேற்போந்த விபரங்கள் எனது அறிவிற்கும், நம்பிக்கைக்கும் எட்டிய அளவில் சரியானவை என உறுதிப்படுத்துகின்றேன்.

————,
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

திகதி :————.

5-7—04.05.73 ந் திகதிய வர்த்தமானி இல. 58.

---

சிறு ஏற்றுமதிப் பயிர்த் திணைக்களம்

ஆராய்ச்சி உத்தியோகத்தர் பதவி

சிறு ஏற்றுமதிப் பயிர்த் திணைக்களத்தில் ஆராய்ச்சி உத்தியோகத்தர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவ்வறிவித்தலுக்குக் கீழே கொடுக்கப்பட்டுள்ள மாதிரிப்படிவத்தில் செயலாளர், தோட்டத் தொழிற் துறைகள் அமைச்சு, த. பெ. இல. 1652, கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு 1973 ம் ஆண்டு மே மாதம் 31 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.

குறிப்பு : (i) கீழே காட்டப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தில் இல்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(ii) விண்ணப்பப்படிவம் அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதமாகிவிட்டது எனக் கூறப்படும் குற்றச்சாட்டு எதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்களை அனுப்புவதற்குக் கடைசித் திகதிவரையும் பொறுத்திருப்பவர்கள் அதனால் ஆகும் இடருக்குத் தாமே பொறுப்பாவர்.

2. நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும் :

(i) பதவி நிரந்தரமானதும் உபகாரச் சம்பளத்திற்கு உரிமை யற்றதாகும். அரசாங்க சேவை சேமலாப நிதிக்கு உதவு தொகை செலுத்தப்பட வேண்டும். ஆரம்பகால சேவை மூன்று வருடங்களுக்கு தகுதிகாண் காலத்தைக் கொண்டதாகும்.

(ii) தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர் அரசாங்கத்தின்கீழ் 1972 ம் ஆண்டு ஜனவரி மாதம் 1 ந் திகதிக்கு முன்னர் நிரந்தரமானதும் உபகாரச் சம்பளத்திற்கு உரிமையுள்ள பதவியை வகித்தவராயும் இருந்தால் ஆரம்பகாலத்தில் ஒரு குறிக்கப்பட்ட காலத்திற்குப் பதில் கடமையாற்ற நியமிக்கப்படுவார்.

3. சம்பளமும் ஏனைய படிகளும் : இப்பதவிக்குரிய சம்பளத் திட்டம் பின்வருமாறு :—

திரட்டிய சம்பளம் : வருடத்திற்கு ரூபா 7,440—10×360 உம் 11×480 ம் சம்பள உயர்வுகளைக் கொண்ட வருடத்திற்கு ரூபா 16,320. (ரூபா 11,520 சம்பளத்திலும், ரூபா 14,880/ சம்பளத்திலும் வினைத்திறமைகாண் தடைகள் உண்டு.)

குறிப்பு :—(i) விதிக்கப்பட்ட பின்னிலைப்பட்டத்தைப் பெற்றுலன்றி எந்த உத்தியோகத்தரும் வருடாந்தம் ரூபா 11,520 ற்கு மேல் சம்பளம் பெறுதற்கு உரித்துடையவரல்லர்.

(ii) மேற்குறித்த பின்னிலைப்பட்டத்தை அல்லது டிப்ளோமா உடைய அபேட்சகர் எவரும் சம்பளத் திட்டத்தில் வருடத்திற்கு ரூபா 8,520/- அடிப் படையில் அமர்த்தப்படுவார்.

4. தேவைப்படும் தகைமைகள் : ஒவ்வொரு அபேட்சகரும் பின் வரும் தகைமைகளை உடையவர் என்பதற்குத் திருப்திகரமான சான்று காட்டுதல் வேண்டும் :—

(i) (அ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றில் விவசாயத்தில், அல்லது தாவரவியல், இரசாயனவியல் எனும் பாடத்தைத் துணைப்பாடமாகக் கொண்டு முதலாந்தர அல்லது இரண்டாந்தரப் பட்டம் பெற்றவராயும் ;

அல்லது

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக மொன்றில் விவசாயத்தில் அல்லது விவசாயத்திற்கிணையான பாடத்தில் பின்னிலைப்பட்டம் பெற்றவராயும்;

அல்லது

(இ) தாவரவியல், இரசாயனவியல், விலங்கியல் என்பவற்றைப் பாடங்களாகக் கொண்டு முதலாந்தர அல்லது இரண்டாந்தரப் பட்டம் பெற்றவராயும்;

(ii) விண்ணப்ப முடிவு தேதியன்று 22 வயதுக்குக் குறையாதவராகவும், 30 வயதுக்கு மேற்படாதவராயும் இருத்தல் வேண்டும்; பின்னிலைப்பட்டத் தகைமைபெற்ற விண்ணப்பகாரரின் மேல் வயதெல்லை 35 ஆகும். (அரசாங்க சேவையிலுள்ள அபேட்சகர்களுக்கு இந்த வயதெல்லைகள் ஏற்புடைத்தாகா.)

(iii) நல்லொழுக்கமும் உடலுறுதியும் உடையவராயுமிருத்தல் வேண்டும்.

5. பின்வரும் சாதனங்களில் ஏதாவது ஒன்றையோ அல்லது எல்லாவற்றையுமோ கேட்கப்படும் பொழுது சமர்ப்பிக்கும்படி விண்ணப்பதாரர் வேண்டப்படுவர் :

(அ) பிறப்புச்சான்றிதழ் (ஞானஸ்நானச் சான்றிதழ்களோ அல்லது உதவி பெறும் பாடசாலைகளுக்கான பிரமாணங்களின் நோக்கத்திற்கு அமைய வழங்கப்பெற்ற பிறப்புச் சான்றிதழ்களோ ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.)

(ஆ) பல்கலைக்கழகப் பட்டச் சான்றிதழ் அல்லது உயர்ந்த கல்விச் சான்றிதழ்.

(இ) இரு நற்சான்றிதழ்கள். இவற்றுள் ஒன்று பாடப்பணிப்பாளர், கல்லூரி ஆசிரியர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாக இருத்தல் வேண்டும்.

(ஈ) தொழிற் தகைமைகளுக்கான சான்றிதழும் அல்லது தொழில் நுட்பத் தகைமைக்கான சான்றிதழும்.

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியடைந்த உயர் தகைமைச் சான்றிதழ்கள்.

குறிப்பு : (i) சாதனங்கள் எவையும் விண்ணப்பப் பத்திரத்துடன் அனுப்பப்படக்கூடாது.

(ii) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டப்படும் பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டாது.

6. அரசாங்க சேவையிலுள்ள அல்லது அரசாங்க யாக்கங்களில் உள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் அவ்வத் தலைவர்களுக்கூடாக அனுப்பப்படுதல் வேண்டும்.

7. விண்ணப்பங்களோ அல்லது அவை சம்பந்தமான தடிதத் தொடர்புகளோ தோட்டத் தொழிற் துறைகள் அமைச்சின் செயலாளருக்கு அனுப்பப்பட வேண்டுமேயொழிய இவ்வமைச்சில் உள்ள எந்த உத்தியோகத்தருக்கும் தனிப்பட்ட முறையில் அனுப்புதல் கூடாது.

8. இவ்வர்த்தமானியின் I ம் பகுதி (II அ) ம் தொகுதியின் தொடக்கத்தில் வெளியிடப்பட்டுள்ள அரசாங்க சேவைப் பதவிகளுக்கான நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகளைப் பார்வையிடுக.

டொறிக் த சூஸா,
செயலாளர்,
தோட்டத் தொழிற்றுறைகள் அமைச்சு.

தோட்டத் தொழில் துறைகள் அமைச்சின் அலுவலகம்,
த. பெ. இலக்கம் 1652,
6, சேர் பாரன் ஜயதிலக்க மாவத்தை, கொழும்பு 1,
1973 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 19 ஆந் திகதி.

மாதிரி விண்ணப்பப் படிவம்

ஆராய்ச்சி உத்தியோகத்தர் பதவிக்கான விண்ணப்பம்

சிறு ஏற்றுமதிப் பயிர்த் திணைக்களம்

(இவ்விண்ணப்பப் படிவத்துடன் எந்தவொரு சாதனமும் இணைக்கப்படுதல் கூடாது.)

1. முழுப்பெயர் (உறுப்பெழுத்தில்) :————.

2. அஞ்சல் முகவரி :————.
(முகவரியில் ஏற்படும் மாற்றங்கள் உடனடியாக அறிவிக்கப்படவேண்டும்.)

3. (அ) பிறந்த திகதி :————.
வருடம் :————. மாதம் :————. தேதி :————.
(ஆ) விண்ணப்ப முடிவுத் தேதியில் சரியான வயது :—
வருடங்கள் :——. மாதங்கள் :——. நாட்கள் :——.

4. வம்சாவழி காரணமாகவா, அல்லது பதிவு காரணமாகவா இலங்கைப் பிரசையெனக் குறிப்பிடுக :————.
(பதிவு காரணமாக இலங்கைப் பிரசையெனின் விவரங்களைத் தருக)

5. பிறந்த இடம் : (அ) விண்ணப்பதாரர் :————.
(ஆ) விண்ணப்பதாரரின் தந்தை :————.
(இ) விண்ணப்பதாரரின் தந்தை வழிப்பாட்டன் :————.
(ஈ) விண்ணப்பதாரரின் தந்தை வழிப்பூட்டன் :————.

6. (அ) ஆணு, பெண்ணு :————.
(ஆ) திருமணமானவரா, தனியாளா, விதவையா அல்லது தாரமிழந்தவரா எனக் குறிப்பிடுக :————.

7. பின்வரும் பாடங்களில் சித்தியெய்திய ஆகக்கூடிய பரீட்சை :————.
(i) சிங்களம் :————.
(ii) தமிழ் :————.
(iii) ஆங்கிலம் :————.

8. 12 வயதிலிருந்து நீர் கல்விபெற்ற பாடசாலைகள், கல்லூரிகள், ஏனைய நிறுவனங்கள் :————.

| பொதுக்கல்வி | | | உத்தியோகக் கல்வி | |
|---|---|---|---|---|
| பாடசாலை கல்லூரி | அல்லது | தொடக்கம் வரை | கல்வித் தாபனம் | தொடக்கம் வரை |
| 1. | | | 1. | |
| 2. | | | 2. | |
| 3. | | | 3. | |

9. நீர் கடன் தொல்லைகள் அற்றவரா ? :————.
இல்லையெனில், கடன்பொறுப்புகளின் தொகை என்ன ? :————.

10. சட்டநீதிமன்றத்தில் ஏதாவது குற்ற பாதகத்திற்குக் குற்றம் சாட்டப்பட்டுள்ளீரா ? அப்படியானுல் வழக்கு இலக்கத்தைக் குறிப்பிட்டு, தேதிகளோடு முழு விபரங்களையும் தருக :————.

11. பாடசாலைக்கல்வி, உத்தியோகக்கல்வி, நுண்தொழிற்கல்வித் தகைமைகள் :————.
(பல்கலைக்கழகத்துச் சகல பட்டங்கள், திறமைகள், உத்தியோகக் கல்வி/நுண்தொழிற் கல்வித் தகைமைகள், விசேட வகுப்புப் பட்டங்களாயின் அவற்றின் விபரங்கள், தோற்றிய பாடங்கள், நிறுவனங்களின் பெயர்கள் என்பவற்றைத் தேதிகளுடன் தருக.)

12. தற்போதைய தொழிலும், முன்னர் பதவிகளில் இருந்தால், அவற்றின் விபரங்களும் :————.

| | பதவி | தொடக்கம்/வரை | ஆண்டுச் சம்பளம் ரூபா |
|---|---|---|---|
| (1) | | | |
| (2) | | | |
| (3) | | | |

(அரசாங்க உத்தியோகத்திலிருந்து நீங்கிய காரணம் கீழேயுள்ள 13 ஆம் நிரப்புப் பிரிவிற் குறிப்பிடப்படல் வேண்டும்.)

13. மேலும் வேறு விபரங்கள் :————.

14. உம்மைப்பற்றிய விபரங்களைப் பெறக்கூடிய உமக்கு அறிந்த இருவரின் பெயர்களையும் முகவரிகளையும் தருக :————.

இந்த விண்ணப்பப் பத்திரத்தில் என்னுல் தரப்பட்டிருக்கும் விபரங்கள் யாவும் உண்மையானவையென்றும் சரியானவை என்றும் நான் அத்தாட்சிப் படுத்துகிறேன். இதனுள் அடங்கியிருக்கும் விபரங்கள் எவையேனும் பொய்யானவை, அல்லது சரியற்றவையென்று தெரிவு செய்யப்படுமுன் அறிந்தால் தகுதியற்றவனுக்கப் படுவேனென்றும், நியமனம் பெற்றபின் சரியற்றவை என்று கண்டுபிடிக்கப்பட்டால் நட்டஈடு எதுவுமின்றி பதவியால் நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

————,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

தேதி :————.

5-4—04.05.73 ந் திகதிய வர்த்தமானி இல. 58

---

பெருந்தெருக்கள் திணைக்களம்

சிரேட்ட பொருளியல் ஆய்வாளர் பதவி

நீர்ப்பாசன, மின்சக்தி, பெருந்தெருக்கள் அமைச்சின், பெருந்தெருக்கள் திணைக்களத்தில் சிரேட்ட பொருளியல் ஆய்வாளர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் கீழ்க்கண்ட மாதிரிப் படிவங்களில் எழுதப்பெற்று, காரியதரிசி, நீர்ப்பாசன, மின்சக்தி, பெருந்தெருக்கள் அமைச்சு, த. பெ. 512, கொழும்பு 1 என்ற முகவரிக்கு பின்வரும் திகதியில் அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக, அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பங்கள் யாவும் பதிவுத்தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும். கடிதவுறையின் இடது மேற் பக்கத்தில் "சிரேட்ட பொருளியல் ஆய்வாளர் பதவி" எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

(அ) உண்ணுட்டு விண்ணப்பங்கள் 04-06-1973.

(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள் 11-06-1973

குறிப்பு.—விண்ணப்பப் படிவம் அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறுமிடத்து அல்லது தாமதமாகிவிட்டது எனக் கூறப்படும் குற்றச்சாட்டெதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புவதற்குக் கடைசித் தேதி வரையும் பொறுத்திருப்பவர்கள் அதனுல் வரும் இடருக்குத் தாமே பொறுப்பாவர்.

(ii) கடல்கடந்த அபேட்சகர்கள் தமது விண்ணப்பப் பத்திரங்களை விரும்பினுல் அந்நாட்டிலுள்ள அல்லது தாம் வதியும் நாட்டுக் கண்மையில் இருக்கும் நாட்டிலுள்ள இலங்கைப் பிரதிநிதிகள் அலுவலகத்தில் நீர்ப்பாசன, மின்சக்தி, பெருந்தெருக்கள் செயலாளருக்கு அனுப்புமாறு குறிப்பிட்ட தேதிக்கு முன் விண்ணப்பப் பத்திரங்களைச் சமர்ப்பிக்கலாம்.

(iii) **மருத்துவச் சோதனையும் பயணச் செலவும்.**—இலங்கை அரசாங்கத்தின் கீழ் நியமனம் பெற வெளிநாட்டில் தேர்ந்தெடுக்கப்படும் இலங்கையரான உத்தியோகத்தர், சேவைக்கு உடற்றகுதி உடையவர் என்பதை உறுதிப்படுத்தற் பொருட்டு, தம்மை அங்கீகரிக்கப்பட்ட மருத்துவத் தொழில் செய்வோரால் சோதிப்பதற்கு உடன்படுமாறு வேண்டப்படுவர். இத்தகைய சோதனைக்கான கட்டணமும் இலங்கைக்கு வருவதற்கு ஏற்படும் பிரயாணச் செலவும் உத்தியோகத்தராலேயே செலுத்தப்படவேண்டும்.

2. **ஒப்பந்த நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.**—பதவி நிரந்தரமானது. நியமனங்கள் சேமலாப நிதி அடிப்படையில் அமையும். தெரிவு செய்யப்படும் அபேட்சகர் தமது திரட்டிய சம்பளத்

தில் 6% ஐ அரசாங்க சேவை சகாய நிதிக்கு செலுத்த வேண்டும். இதற்கான அரசாங்கத்தின் உதவு தொகை இவரது திரட்டிய சம்பளத்தின் 9% ஆகும்.

3. சம்பளமும் படிகளும்.—இப்பதவிக்குரிய திரட்டிய வருடாந்த சம்பள அளவுத்திட்டம் ரூபா 17,040—600 × 3—18,840 ஆகும்.

4. தகவுத் திறன்.—விண்ணப்பதாரிகள் ஒவ்வொருவரும் பின்வரும் தகைமைகளுடையவரெனத் திருப்தியான முறையில் நிரூபிக்கவேண்டும்.

(அ) சிறந்த நல்லொழுக்கமும் உடலுறுதியும் உள்ளவராயிருத்தல் வேண்டும்.

(ஆ) 1973-06-11 ஆம் திகதியன்று 35 வயதுக்கு குறையாதவராயும் 45 வயதுக்கு மேற்படாதவராயும் இருத்தல் வேண்டும். அரசாங்க சேவையிலுள்ள அபேட்சகர்களுக்கு இந்த வயதெல்லை கவனிக்கப்படமாட்டாது.

(இ) ஒரு அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் பொருளியலில் முதலாந்தர அல்லது இரண்டாந்தர மாண்புப் பட்டம் பெற்றவராயிருத்தல் வேண்டும். அல்லது பொருளியல் கலை முதல்வர் பட்டம் பெற்றவராயிருத்தல் வேண்டும்.

(ஈ) போக்குவரத்து பொருளியலில் குறைந்தது ஒரு வருட காலமாவது உயர் பட்டதாரிப் பயிற்சி நெறி வகுப்பில் பயின்றிருப்பதோடு, ஒரு அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் உயர் பட்டதாரி டிப்ளோமாவை அல்லது போக்குவரத்து பொருளியலை பிரதான பாடமாகக் கொண்டு உயர் பட்டம் பெற்றிருத்தல் வேண்டும்.

(உ) பெருந்தெருக்கள் திட்டங்களை அடையாளமறிதல், தெரிவு செய்தல், தயாரித்தல், மதித்தல், இவை போன்ற துறைகளில் நிறைவேற்றும் உயர் உத்தியோகத்தராதரத்தில் பத்துவருட கால அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

5. கேட்கப்படும்பொழுது தனித்த அல்லது பின்வரும் எல்லாப் பத்திரங்களையும் சமர்ப்பிக்குமாறு அபேட்சகர் வேண்டப்படுவர்.

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் (மூ. கு.—ஞானஸ்நானச் சான்றிதழோ, உதவி பெறும் பாடசாலைகளின் பிரமாணக் கோவைக்கோ வழங்கப்பட்ட பிறப்புச் சான்றிதழ்களோ ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.)

(ஆ) உயர்ந்த கல்வி அல்லது பட்டச் சான்றிதழ்.

(இ) படிப்பு அதிபரிடமிருந்தோ, கல்லூரி விரிவுரையாளரிடமிருந்தோ, பேராசிரியரிடமிருந்தோ பெற்ற ஒன்று உள்ளடங்கிய, இரண்டு நன்னடத்தைச் சான்றிதழ்கள்.

(ஈ) உயர் தொழிற்றகைமைச் சான்றிதழ் அல்லது தொழில் நுட்பத் தகைமைச் சான்றிதழ், அல்லது இரண்டு.

(உ) சிங்களத்தில் சித்தியடைந்து பெற்ற உயர்ந்த தேர்வுச் சான்றிதழ்.

குறிப்பு.—(1) விண்ணப்பப் படிவத்துடன் எச்சாதனமோ சாதனங்களின் பிரதியோ இணைக்கப்படலாகாது ;

(2) கேட்கப்படும் பொழுது சாதனங்களை வழங்கத் தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

6. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தரின் விண்ணப்பங்கள் அவ்வத் திணைக்களத்தின் தலைவரினூடாக அனுப்பப்படல் வேண்டும். அவ்விண்ணப்பங்கள் குறிப்பிட்ட திகதிக்கு முன் கிடைத்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. எனினும் திணைக்கள அதிபர் விண்ணப்பங்கள் குறிப்பிட்ட திகதிக்குமுன் கிடைத்ததெனவும் அவற்றை குறிப்பிட்ட திகதிக்கு முன் அனுப்பித் தவறியதற்குக் தகுந்த காரணம் காட்டி அவ் விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும்படி சிபார்சு செய்தல் வேண்டும்.

7. விண்ணப்பங்களும், இது சார்ந்த தொடர்புகளும், நீர்ப்பாசன மின்சக்தி, பெருந்தெருக்கள் செயலாளருக்கு முகவரியிடப்பட வேண்டுமேயன்றி, அவ்வமைச்சில் சேர்ந்த எவ்வுத்தியோகத்தருக்கும் தனிப்பட்ட முறையில் அனுப்பப்படலாகா.

8. இவ்வர்த்தமானியின் பகுதி I தொகுதி (II அ) இன் தொடக்கத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள அரசாங்க சேவைப் பதவி நியமனங்களுக்குரிய பொது நிபந்தனைகளின் கவனத்தைக் கோருமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

எம். சந்திரசேன,
செயலாளர்,
நீர்ப்பாசன, மின்சக்தி, பெருந்தெருக்கள்
அமைச்சு.

நீர்ப்பாசன, மின்சக்தி, பெருந்தெருக்கள் அமைச்சு
காலிமுக செயலகம்,
த. பெ. 512,
கொழும்பு 1.

### சிரேட்ட பொருளியல் ஆய்வாளர் பதவி
### மாதிரிப் படிவம்

1. முழுப்பெயர் :————.
(பெரிய எழுத்துக்களில்)

2. நிரந்தர முகவரி :————.

3. (அ) பிறந்த தேதி :————.
(ஆ) வயது : 11.6.1973 இல் :———— வருடம் :————;
மாதம் :———— ; நாட்கள் :————.

4. சாதியம் :————.

(அ) பதிவு காரணமாகவா அல்லது வம்சாவழி காரணமாகவா ? :————.

(ஆ) வம்சாவழி காரணமாக இருப்பின், கீழ்குறிப்பிட்டவர்கள் பிறந்த திகதி :

(i) விண்ணப்பதாரி :————.

(ii) விண்ணப்பதாரியின் தகப்பன் :————.

(iii) விண்ணப்பதாரியின் தகப்பன் வழிப்பாட்டன் :————.

(iv) விண்ணப்பதாரியின் தகப்பன் வழிப்பூட்டன் :————.

5. (அ) பால் :————.
(ஆ) விவாகம் செய்தவரா, செய்யாதவரா, தாரமிழந்தவரா? :————.

6. கல்வித் தகைமைகளும், உயர்தொழில் தகைமைகளும் :————.

7. கீழ்க்கண்ட மொழிகளில் ஆகக்கூடிய சித்தி எய்திய பரீட்சை :

(அ) சிங்களம் :————.

(ஆ) தமிழ் :————.

(இ) ஆங்கிலம் :————.

8. நீர் பணமுட்டு அற்றவரா ? பணமுட்டு உமக்கு இருப்பின் எவ்வளவுக்கு ? :————.

9. சட்டமுறையில் நீதிமன்றத்தில் யாதேனும் குற்றவியல் தவறுக்காக உம்மீது குற்றத்தீர்ப்பு அளிக்கப்பட்டதா? அங்ஙனமாயின், முழுவிபரத்தையும், திகதி, வழக்கு எண் ஆகியவற்றைக் குறிப்பிடுக :————.

10. தற்போது வகிக்கும் உத்தியோக விபரங்கள். இதற்குமுன் வகித்த உத்தியோகம் இருப்பின் அதன் விபரமும்:————.

11. வேறு ஏதும் விபரங்கள் :————.

இவ்விண்ணப்பப்படிவத்தில் நான் கொடுத்துள்ள விபரங்கள் யாவும் உண்மையானவையும், சரியானவையுமென இத்தால் உறுதியளிக்கின்றேன் இங்கு கொடுத்துள்ள விபரங்கள் எவையேனும் பொய்யானவை அல்லது பிழையானவை எனக் காணப்படின் தெரிவு செய்யப்படுவதற்கு முன்னராயின் தகுதியற்றவராக்கப்படுதற்கும், நியமனத்திற்குப் பின்னராயின் எவ்வித நஷ்ட ஈடின்றி விலக்கப்படுதற்கும் பாத்திரமாவேன் என அறிவேன்.

————,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

5-41—04.05.73 ந் திகதிய வர்த்தமானி இல. 58

## அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம்

### செயலாளர் பதவி

இக் கூட்டுத்தாபனத்தில் மேற்காணும் பதவிக்கான விண்ணப்பங்கள் தேவையெனக் கருதப்படும் தகுதிகள் கொண்ட இலங்கைப் பிரசைகளிடமிருந்து கீழ்க்கையொப்பமிடுபவரால் ஏற்றுக் கொள்ளப்படும்.

**சம்பள விகிதம்.**—ரூபா 1,350—6 × 50—1,650 (மாதமொன்றிற்கு எல்லாமுட்பட)

**வயதெல்லை.**—30 முதல் 45 வரை.

**கல்வி மற்றும் தகைமைகளும் தேவைகளும்.**—அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக மொன்றின் பட்டதாரி ஒருவரும் நிறைவேற்று உத்தியோகத்தர் பதவியில் 5 வருட அனுபவம் பெற்றவரும் ஆங்கிலத்தில் தொழில் புரியக்கூடியவருமான ஒருவர்

அல்லது

5 வருட சேவை அனுபவமுள்ள அப்புக்காத்து அல்லது பிரக்கிராசியாராக இருத்தல் வேண்டும்.

இக்கூட்டுத்தாபனக் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளக் கூடிய விண்ணப்பப் படிவங்களில் நிரப்பப்பட்ட விண்ணப்பங்கள் பதிவு செய்யப்பட்ட கடிதவுறைகளில் தலைவர், அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம், 2 பி, டி பொன்சேகா வீதி, கொழும்பு 5 என்ற முகவரிக்கு 1973.05.15 அன்று அல்லது அதற்கு முன்பு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

நேரில் வருபவர்கள் விண்ணப்பப் படிவங்களை காரியாலய சாதாரண அலுவல் நேரங்களிலும் மற்றவர்கள் தமது விலாசமிடப்பட்டு முத்திரை ஒட்டப்பட்ட (அளவு 9" × 4") கடிதவுறைகளை எனக்கனுப்பியும் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்பங்கள் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்படமாட்டாது.

தலைவர்,
அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம்.

2பி, டி பொன்சேகா வீதி,
கொழும்பு 5,
23 ஏப்ரல் 1973.

5-68—04.05.73 ந் திகதிய வர்த்தமானி இல. 58.

---

## இலங்கைப் போக்குவரத்துச் சபை

### காலிஸ்தானங்கள்

சபையின் சேவையில் பின்வரும் பதவிகட்கு கவனிக்கப்படுவதற்காக இலங்கைக் குடியரசின் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன :

(i) சட்ட உத்தியோகத்தர் III ஆம் தரம்
(ii) கணக்கு, கணக்காய்வு உத்தியோகத்தர்கள் V ஆம் தரம்

**1. சட்ட உத்தியோகத்தர் III ஆம் தரம்**

**(அ) சம்பள அளவுத் திட்டம் :**

(எல்லாம் உட்பட) மாதாந்தம் ரூபா 1,100—50 × 10—ரூ. 1,700. ரூபா 1,350 பெற முன்னர் வினைத்திறமைகாண் தடையுண்டு.

**(ஆ) உயர்தொழிற் தகைமைகளும் வயதும் :**

(i) ஆகக் குறைந்தது 4 வருட அனுபவமுடைய வழக்குரைஞர்கள் (அப்புக்காத்துக்கள்). 1973.05.21 ஆம் தேதியன்று 35 வயதுக்கு மேற்படக்கூடாது.

(ii) சிங்களத்தில் தேர்ச்சி பெற்றிருத்தல் மேலதிக தகைமையாகவிருக்கும்.

**(ii) கணக்கு, கணக்காய்வு உத்தியோகத்தர்கள் V ஆம் தரம்**

**(அ) சம்பள அளவுத் திட்டம் :**

(எல்லாம் உட்பட) மாதாந்தம் ரூ. 600/-— 40 × 10—ரூ. 1000/- ரூ. 800, ரூ. 920 பெறுமுன்னர் வினைத்திறமைகாண் தடைகளுண்டு.

**(ஆ) தகைமைகள் :**

(i) வயது : 1973—05—21 ஆம் தேதியன்று 22 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.

(ii) உயர்தொழில் :

(அ) தத்துவம் பெற்ற கணக்காளர் நிலையத்தின் இடைப் பரீட்சையில் (இன்டர்மீடியற் பரீட்சை) சித்தியெய்தியிருக்கவேண்டும்.

அல்லது

(ஆ) ஆகு செலவு, வேலை கணக்காளர் நிலையப் பரீட்சையில் (கோஸ்ட் அன்ட் வேர்க்ஸ் அக்கவுன்டன்ஸ்) பரீட்சையில் I ஆம், II ஆம், III ஆம் பகுதிகளில் சித்தியெய்தியிருக்கவேண்டும்.

அல்லது

(இ) இலங்கைத் தொழினுட்ப கல்லூரியின் கணக்கியல் தகுதித் தேர்வுப் பத்திரம் பெற்றிருக்கவேண்டும்.

அல்லது

(ஈ) இவற்றையொத்த தகைமையைப் பெற்றிருக்க வேண்டும் ; அத்தோடு

பொருந்திப் பயிலும் ("ஆட்டிக்கிள்ஸ்") காலத்தை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்திருக்க வேண்டும் அல்லது அரசாங்க தாபனத்தில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தாபனமொன்றில் ஆகக் குறைந்தது 5 ஆண்டு கணக்கீடு அல்லது கணக்காய்வு வேலையில் ஈடுபட்டிருத்தல் வேண்டும்.

2. (அ) அரசாங்க சேவையில் அல்லது உள்ளூராட்சிச் சேவையிலிருக்கும் உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பங்களைத் தத்தமது திணைக்களங்கள் மூலமாக அனுப்பிவைக்க வேண்டும். அவர்களை, தற்போது அவர்கள் கடமையாற்றும் திணைக்களத் தலைவர்கள் 1957 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க மோட்டார் போக்குவரத்துச் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் நியதிகளிற்கு ஏற்பச் சபையில் வேலையாற்ற விடுவிப்பதற்கு உடன்பட ஆயத்தமாயிருந்தால் மட்டுமே அவர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படும்.

(ஆ) விளம்பர நியதிகட்கேற்பக் கூட்டுத்தாபனங்களிலுள்ள தகைமையுடைய உத்தியோகத்தர்கள் நியமனத்திற்குத் தெரிவுசெய்யப்படும் பட்சத்தில் அவர்கள் தற்போது கடமையாற்றும் கூட்டுத்தாபனத் தலைவர் அல்லது பொது முகாமையாளர், அவர்களை விடுவிப்பதற்கு உடன்பட ஆயத்தமாயிருந்தால் மட்டுமே, அவ்வுத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படும். கூட்டுத்தாபன மூலமாகவே விண்ணப்பங்கள் அனுப்பப்படவேண்டும்.

3. வேலை நிபந்தனைகள்.—தெரிவுசெய்யப்பட்ட பரீட்சார்த்திகள் முதலில் 3 வருடத் தகுதிகாண் நிலையில் நியமிக்கப்படுவார்கள். அவர்கள் :—

(1) நியமனத்திற்கு முன்பு வைத்தியப் பரிசோதனைக்கு ஆளாகி உடல் உறுதியுள்ளவர்களென சித்தியெய்த வேண்டும்.

(2) ஏற்கனவே இயற்றப்பட்டுள்ளதும், இனிமேல் இயற்றப்படக்கூடியதுமான சபையின் விதிகளுக்கும், பிரமாணங்களுக்கும் இயைய நடத்தல் வேண்டும்.

(3) தங்களுடைய தகுதிகாண் நிலைக் காலத்தில் அரசாங்க மொழிக்கொள்கையை நடைமுறையிற் கொண்டுவருவதற்குச் சபையால் விதிக்கப்பட்ட தாராதர அளவிற்குச் சிங்கள மொழியிற் தேர்ச்சி பெறவேண்டும்.

(4) தங்களது சம்பளத்தில் 6 சத விகிதத்தைச் சபையின் சேமலாப நிதிக்குச் செலுத்தவேண்டும். சபை 9 சத விகிதத்தைச் செலுத்தும்.

(5) இலங்கையில் எப் பகுதியிலேனும், சபையின் எப் பிரிவிலேனும் சேவையாற்ற வேண்டும்.

4. கீழ்க் கொடுக்கப்பட்டுள்ள படிவத்திற்கேற்ப விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு 1973.05.21 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னதாக, கொழும்பு 5, நாரகேன்பிட்டி, கிருல வீதி 200 ஆம் இலக்கத்திலுள்ள ஆளணி முகாமையாளருக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கப்பட வேண்டும்.

ஆளணி முகாமையாளர்,
இலங்கைப் போக்குவரத்துச் சபை.

200, கிருல வீதி,
நாரகேன்பிட்டி,
கொழும்பு 5.

## இலங்கைப் போக்குவரத்துச் சபை

### விண்ணப்பப் படிவம்

1. விண்ணப்பிக்கப்படும் பதவி :————.

2. பரீட்சார்த்தியின் முழுப் பெயர் :————.

3. அஞ்சல் முகவரி :————.

4. பிறந்த திகதி :————.
(பிறப்புச் சான்றிதழின் பிரதியொன்று—மூலப் பிரதியல்ல—இணைக்கப்பட வேண்டும்).

5. 1973.05.21 திகதியன்று சரியான வயது :————.
வருடங்கள்———— மாதங்கள்———— நாட்கள்————

6. நீர் இலங்கைப் பிரசையானது வம்சாவழியாகவா அல்லது பதிவு மூலமாகவா ? :————.

7. விவாகமானவரா அல்லது விவாகமாகாதவரா ? :————.
(விவாகம் செய்தவராயின் விவாகம் செய்த திகதியும் பிள்ளைகளின் தொகையும் அவர்களின் வயதும்).

8. உயர்நிலைப் பாடசாலைக் கல்வி :————.
(படித்த பாடசாலைகள், சித்தியெய்திய பரீட்சைகள் ஆகியவற்றைத் திகதிகளுடன் தருக) :————.

9. உயர் கல்வி (படித்த நிலையங்கள், சித்தியெய்திய பரீட்சைகள், உயர் தொழில் தகைமைகள் ஆகியவற்றைத் திகதிகளுடன் தருக. சான்றிதழ்களின் பிரதிகள் (மூலப் பிரதிகள் அல்ல) இணைக்கப்படவேண்டும்).

10. தொழில் நுட்ப உயர்தொழில்த் தகைமைகள் :————.
(படித்த நிலையங்கள், சித்தியெய்திய பரீட்சைகள், பெற்ற தகைமைகள் ஆகியவற்றைத் திகதிகளுடன் தருக. சான்றிதழ்களின் பிரதிகள் (மூலப் பிரதிகள் அல்ல) இணைக்கப்படவேண்டும்).

11. தொழில் :—
(பாடசாலை விட்டு விலகிய பின் பார்த்த வேலைகளின் விபரம். அதாவது பதவிப் பெயர், வேலைகொள்வோரின் பெயர், நியமனத் திகதி, விலகிய திகதி, விலகுவதற்கான காரணங்கள் ஆகியவற்றைக் குறிப்பிடுக).

12. அரசாங்க சேவையில் அல்லது உள்ளூராட்சிச் சேவையில் அல்லது வர்த்தக நிலையங்களில் நிறைவேற்றுப் பதவிகளில் உயர் தொழில் பயிற்சி அல்லது அனுபவம். (வகித்த பதவிகள், வேலையின் தன்மை, எல்லாம் உட்பட்ட சம்பளம் ஆகியவற்றைத் திகதிகளுடன் குறிப்பிடுக). :————.

13. விண்ணப்பிப்பதற்கு ஆதாரமான விசேட உரிமைகள் (இப் பதவிக்கு உங்கள் தகுதியை உயர்த்தக்கூடிய மேற்கூறிய எப் பதவியிலேனும் செய்த வேலையின் விவரங்களைச் சுருக்கமாகத் தருக). :————.

14. சிங்களத்தில் எய்தியுள்ள ஆகக்கூடிய தராதரம் :————.

15. இதற்கு முன்னர், இலங்கைப் போக்குவரத்துச் சபையில் ஏதாவது பதவிக்கு நீர் விண்ணப்பித்தீரா ? விண்ணப்பித்திருப்பின் முடிவுகள் யாவை ? :————.

16. வேறேதேனும் விபரங்கள் :————.

17. சட்ட நீதிமன்றத்தில் கிறிமினல் குற்றங்கள் எதற்கேனும் குற்றவாளியாகக் காணப்பட்டீரா ? அங்ஙனமாயின் விவரங்கள் தருக :————.

18. விண்ணப்பதாரர் பற்றிய தகவல்கள் பெறக்கூடிய இருவரது பெயர்களும் முகவரிகளும் :————.

(1)

(2)

இவ் விண்ணப்பத்தில் என்னால் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் யாவும் உண்மையானவையெனவும், இதன்கண் தரப்பட்டுள்ள விடயங்கள் பிழையானவையாகவோ, சரியற்றவையாகவோ தெரிவிற்கு முன் காணப்பட்டால் தகுதியற்றவரென நீக்கப்படுவதற்கும், தெரிவிற்குப் பின் கண்டுபிடிக்கப்பட்டால் நட்டஈடு இன்றி உத்தியோகத்திலிருந்து விலக்கப்படுவதற்கும் இடமுண்டு என்பதையும் நான் நன்கறிவேனெனவும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன்.

————,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :————.

5-53—04.05.73 ந் திகதிய வர்த்தமானி இல. 58

**அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்குமுரிய புதிய கிரய விகிதங்கள்**

**01.12.1968 தொடங்கி அமுலுக்கு வந்தது**

## "இலங்கைக் குடியரசு வர்த்தமானி (கெசற்)"

**வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவர்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. சனிக்கிழமைகளில் மு. ப. 8 மணி முதல் நண்பகல் 12 மணி வரையும், மற்றும் நாட்களில் மு. ப. 8 மணி முதல் பி. ப. 3.30 மணி வரையும் காரியாலய நேரமாகும்.

4. சனிக்கிழமைகளில் மு. ப. 11 மணிக்கும், மற்றும் நாட்களில் பி. ப. 2.00 மணிக்கும் பணம் கொடுக்கல் வாங்கல் முடிவுறும்.

5. சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படல் வேண்டும். தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.

6. நகலை கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் எழுதுதல் விசேஷமாக ரைப் அடித்தல் பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும்.

7. கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.

8. வியாபார விளம்பரங்களும், பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்படவேண்டிய விளம்பரங்கள் "சுப்பிறீம் கோட் புறெக்ரால்" கைகொயப்பமிடப்பட்டு அல்லது கையொயப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்படமாட்டா.

10. அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 1968 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 01 ந் திகதியிலிருந்து பின்வருமாறு :—

| | ரூ. | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய .. .. .. | 20 | 0 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலம் அல்லது அதன் பகுதி .. .. | 20 | 0 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் ¼ பக்கம் .. .. .. | 220 | 0 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் .. .. | 440 | 0 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைக் குடியரசு வர்த்தமானி வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. 1966 ம் ஆண்டு மார்ச் மாதம் 01 ம் திகதி தொடக்கம் வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.

13. சந்தா விபரம் 01.12.68 ந் திகதியில் இருந்து நடைமுறைக்கு வரும்.

| இலங்கைக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | உள்ளூர் ரூ. ச. | | வெளியூர் ரூ. ச. |
|---|---|---|---|
| ஒவ்வொரு பகுதியும் .. .. .. | 46 0 | .. | 60 0 |
| முதற் பகுதியின் தனிப்பிரிவு .. .. .. | 36 0 | .. | 42 0 |
| முதற் பகுதியின் இரு பிரிவுகள் .. .. | 43 50 | .. | 51 50 |

ஆறு மாதங்களுக்குக் குறையாமலும், வருட முடிவிலும், அரை வருடத்திலும் முடிவடையக்கூடியதுமான காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்பெறும்.

**தனிப்பட்ட பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | விலை ரூ. ச. | | தபாற் செலவு (உள்ளூர்) சதம் |
|---|---|---|---|
| (அ) (i) வர்த்தமானியில் இடம்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் ஒவ்வொரு பகுதியும் .. .. | 0 50 | .. | 20 |
| (ii) வர்த்தமானியில் இடம்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குப் பின் ஒவ்வொரு பகுதியும் .. .. | 1 0 | .. | 20 |
| (ஆ) (i) வர்த்தமானியில் இடம்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் முதற் பகுதியின் ஒவ்வொரு பிரிவும் .. | 0 30 | .. | 15 |
| (ii) வர்த்தமானியில் இடம்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குப் பின் முதற்பகுதியின் ஒவ்வொரு பிரிவும் .. | 0 60 | .. | 15 |

இவைகளில் எவையேனும் பெறவிரும்புவோர் சரியான பணத் தொகையை அதிபர், அரசாங்க பிரசுர நிலையம், தபாற் பெட்டி இல. 500, கொழும்பு என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும் சந்தாப் பணம் ஏற்பதற்கும் தனிப்பிரதிகள் விநியோகம் செய்வதற்கும் இவரே முழுப் பொறுப்பாளியாவார்.

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ்வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாச தாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்து சேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், தபாற் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட்ட வேண்டும். அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.

**முக்கிய கவனிப்பு.**—குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும் என்பதையும், அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா என்பதையும் கவனத்திற் கொள்க.

**அட்டவணை 1973**

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| **ஏப்பிறில்** | ... | 6.4.73 | வெள்ளி | .. | 28.3.73 | புதன் | .. | ந.ப. 12.00 |
| | | 11.4.73 | புதன் | .. | 4.4.73 | புதன் | .. | ந.ப. 12.00 |
| | | 19.4.73 | வியாழன் | .. | 11.4.73 | புதன் | .. | ந.ப. 12.00 |
| | | 27.4.73 | வெள்ளி | | 18.4.73 | புதன் | .. | ந.ப. 12.00 |
| **மே** | ... | 4.5.73 | வெள்ளி | .. | 25.4.73 | புதன் | .. | ந.ப. 12.00 |
| | | 11.5.73 | வெள்ளி | .. | 2.5.73 | புதன் | .. | ந.ப. 12.00 |
| | | 18.5.73 | வெள்ளி | .. | 9.5.73 | புதன் | .. | ந.ப. 12.00 |
| | | 25.5.73 | வெள்ளி | .. | 15.5.73 | செவ்வாய் | .. | ந.ப. 12.00 |
| **யூன்** | ... | 1.6.73 | வெள்ளி | .. | 23.5.73 | புதன் | .. | ந.ப. 12.00 |
| | | 8.6.73 | வெள்ளி | .. | 30.5.73 | புதன் | .. | ந.ப. 12.00 |
| | | 14.6.73 | வியாழன் | .. | 6.6.73 | புதன் | .. | ந.ப. 12.00 |
| | | 22.6.73 | வெள்ளி | .. | 13.6.73 | புதன் | .. | ந.ப. 12.00 |
| | | 29.6.73 | வெள்ளி | .. | 20.6.73 | புதன் | .. | ந.ப. 12.00 |

**எஸ். டபிள்யூ. பீ. பீரிஸ்,**
*அரசாங்க அழுத்தகர்.*

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஆண்டு ஓகத்து மீ 18 ந் உ.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது